நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்து வைப்போம். விடப்பட்டிருக்கிற பகுதியை, இந்த ஆண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

(44) சேலம், தர்மபுரி மாவடங்களில் நோயினால் கால்நடைகள் பாதிக்கப்படுவது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பல பகுதிகளிலுள்ள கால்நடைகளை எதிர்பாராத வகையில் தாக்கியுள்ள இனந்தெரியாத நோயின் காரணமாக அப்பகுதியில் கால்நடைகளின் இழப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அப்பகுதி வாழ் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

(45) தென் ஆற்காடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் ஊதியத் தொகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். சிவராமன், எஸ். சிவராஜ் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களில் ஒன்றியத்திலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத் தொகை கிடைக்கப்பெறாததால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

(46) நீலகிரி மாவட்டத்தில் பருவ மழை தவறியதால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. உச்சி அவர்கள் ''நீலகிரி மாவட்டம், கூடலூர், உதகை, கோத்தகிரி

மற்றும் கூனூர் வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

(47) சேலம், ஆத்தூர் வட்டத்தில் பருவமழை தவறியதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. பழனிமுத்து, '' சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

(48) கோவை கழிவு நீர்ப்பண்ணைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுவது குறித்து.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. '' கோவை மாநகர் கழிவு நீர்ப்பண்ணை அமைப் பதற்காக வெள்ளனூர், வெள்ளாளப் பாளையம் இடையர் பாளையம், கஞ்சிக் கோணம் பாளையம், கோணவாய்க்கால் பாளையம், போத்தனூர் ஆகிய ஊர்களில் பெருமளவில் நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கை தீவிரப் படுத்தப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நானே நேரடி யாக அறிவேனென்ற காரணத்தினால், விளக்கத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். அந்த இடத்தை நானே பார்வை யிட்டேன். அந்தக் கழிவுநீர்ப் பண்ணையால் அந்த ஊர்கள்